க.பொ.த (உ.தர) உதவிக் கருத்தரங்கு - 2016

கணக்கீடு I

இரண்டு மணித்தியாலம்

கவனிக்கவும் :

- ⋆ இலக்கம் 1 தொடக்கம் 30 வரையிலான வினாக்களுக்காக சரியான விடையினை முன்னாலுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ⋆ இலக்கம் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான, சரியான விடையை எழுதுக.

01. விசேட நோக்க நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள எக்கூற்று/கூற்றுகள் சரியானவை?

A வெளியகப் பிரிவினருக்கு தீர்மானம் எடுப்பதற்கு தேவையான தகவல்களை இது வழங்குகின்றது.

B நிறுவனமொன்றின் முகாமைத்துவத் தகவல் முறைமையின் பகுதி ஒன்றாகும்.

C நிறுவனத்தின் அமைப்பு ரீதியான செயற்பாட்டுக் கருமங்களை திட்டமிடுவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் இது தயாரிக்கப்படும்.

(1) A மட்டும். (2) B மட்டும்.
(3) A யும் B யும் மட்டும். (4) B யும் C யும் மட்டும்.
(5) A, B, C அனைத்தும். (..............)

02. நிபுணி வணிகத்தின் 2016/01/01 ல் நிதி நிலைமைக் கூற்றில் காணப்பட்ட பெறுமதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

நடைமுறைச் சொத்து + நடைமுறையல்லாச் சொத்து = ந.மு.பொ + ந.மு.அல்.பொ + உரிமை

100 000 + 400 000 = 200 000 + 50 000 + 250 000

2016 ஜனவரி 02 இல் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.

(i) 15% VAT வரியுடன் ரூ. 34 500 பெறுமதியான பொருட்கள் கடனுக்கு விற்கப்பட்டன. (மொத்த இலாப வீதம் VAT இற்கு முன்னரான விற்பனை விலையின் அடிப்படையில் 20% ஆகும்.

(ii) ரூ. 2 000 கடன்வட்டி உள்ளடங்கலாக வங்கிக்கடன் தவணைக்கட்டணம் ரூ. 20 000 காசாக செலுத்தப்படல்.

மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் சரியான கணக்கீட்டுச் சமன்பாடு எது?

	ந.மு.சொத்து	+	ந.மு.அல்.சொ	=	ந.மு.பொ	+ ந.மு.அல்.பொ	+ உரிமை
(1)	+ 80 000	+	400 000	=	+ 200 000	+ 50 000	+ 230 000
(2)	+ 85 000	+	400 000	=	+ 200 000	+ 32 000	+ 253 000
(3)	+ 85 000	+	400 000	=	+ 200 000	+ 30 000	+ 257 500
(4)	+ 89 500	+	400 000	=	+ 204 500	+ 32 000	+ 250 000
(5)	+ 90 500	+	400 000	=	+ 204 500	+ 32 000	+ 254 000

(..............)

03. கணக்குகளின் வகைப்படுத்தல் தொடர்பாக கீழே வழங்கப்பட்டுள்ள அட்டவணையில் சரியான வகைப்படுத்தலை காட்டுகின்ற விடையினை மாத்திரம் தெரிவு செய்க.

		சொத்துக் கணக்கு	பொறுப்புக் கணக்கு	உரிமைக் கணக்கு	வருமானக் கணக்கு	செலவுக் கணக்கு
(1)	உட்திரும்பல் கணக்கு	√				
	கொள்வனவுக் கணக்கு					√
(2)	எடுப்பனவுக் கணக்கு			√		
	கொள்வனவுக் கணக்கு					√
(3)	எடுப்பனவுக் கணக்கு					√
	வெளித்திரும்பல் கணக்கு					√
(4)	அறவிடமுடியாக் கடன் கணக்கு					√
	ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு		√			
(5)	பெறுமானத் தேய்வுக் கணக்கு					√
	பெறு.தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு				√	

(..............)

[பக். 2 ஐப் பார்க்க.

04. ரூ. 20 000 கிரயம் கொண்ட சரக்கிருப்பானது கிரயத்தில் 25% இலாபத்துடன் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது. இக்கொடுக்கல் வாங்கலை பதிவு செய்யும் முறையினைக் காட்டும் சரியான விடையைத் தெரிவு செய்க.

	மூல ஆவணம்	மூல ஏடு	இரட்டைப் பதிவு		
(1)	பட்டியல்	காசேடு	கடன்பட்டோர் கணக்கு வரவு	25 000	
			விற்பனைக் கணக்கு செலவு		25 000
(2)	பட்டியல்	விற்பனை நாட்குறிப்பேடு	கடன்பட்டோர் கணக்கு வரவு	25 000	
			விற்பனைக் கணக்கு செலவு		25 000
(3)	பட்டியல்	விற்பனை நாட்குறிப்பேடு	விற்பனைக் கணக்கு வரவு	25 000	
			கடன்பட்டோர் கணக்கு செலவு		25 000
(4)	பற்றுச்சீட்டு	காசேடு	காசுக் கணக்கு வரவு	25 000	
			விற்பனைக் கணக்கு செலவு		25 000
(5)	கச்சாத்து	விற்பனை நாட்குறிப்பேடு	கடன்பட்டோர் கணக்கு வரவு	25 000	
			விற்பனைக் கணக்கு செலவு		25 000

(..............)

05. **குமுதினி வணிகம்** 2016/01/01 இல் **சுராங்கனி கம்பனிக்கு** ரூ. 75 000 பெறுமதியான பண்டங்களை கடனுக்கு விற்பனை செய்தது. பண்டங்களைக் கொண்டு செல்லும்போது ரூ. 2 000 பெறுமதியான பண்டங்கள் பழுதடைந்தமையால் 2016/01/04 இல் அவை மீளத்திருப்பியனுப்பப்பட்டன. சுராங்கனி கம்பனி ரூ. 30 000 தொகையினை காசோலை மூலம் செலுத்தியது.

மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களின்போது குமுதினி வணிகத்தினால் பயன்படுத்தவேண்டிய மூல ஆவணங்களை முறையாக காட்டும் விடை எது?

(1) வரவுத்தாள், பட்டியல், கொடுப்பனவுக் கச்சாத்து.
(2) பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
(3) செலவுத்தாள், பற்றுச்சீட்டு, பட்டியல்
(4) பட்டியல், வரவுத்தாள், வங்கிக்கூற்று
(5) பட்டியல், செலவுத்தாள், கச்சாத்து (..............)

The National e-Learning Portal for The General Education

06. வணிக நிறுவனமொன்றின் 2016.03.31 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 80 000 ஆகும். எனினும் அத்திகதியில் காணப்பட்ட கடன்பட்டோர் பேரேட்டு மீதியின் மொத்தமானது வித்தியாசமாக காணப்பட்டது. அவ்வித்தியாசத்திற்கான காரணங்கள் பின்வருமாறு

1. விற்பனை நாட்குறிப்பின் மொத்தம் ரூபா 2 000 இனால் குறைவாகக் காணப்பட்டது.
2. கடன் விற்பனை ரூபா 20 000 விற்பனை நாட்குறிப்பில் ரூபா 2 000 எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது.
3. ரூபா 4 500 கடன் விற்பனை உரிய கடன்பட்டோர் கணக்கில் ரூபா 5 400 எனப் பிரதி செய்யப்பட்டிருந்தது.
4. கொடுத்த கழிவு ரூபா 500 கடன் பட்டோரின் தனிப்பட்ட கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

2016.03.31 ஆம் திகதி நிதிக் கூற்றில் காட்டவேண்டிய கடன்பட்டோர் மீதி எவ்வளவு?

(1) ரூபா 79 100 ஆகும். (2) ரூபா 88 600 ஆகும். (3) ரூபா 98 000 ஆகும்.
(4) ரூபா 98 600 ஆகும். (5) ரூபா 100 000 ஆகும். (..............)

07. **நிதி அறிக்கைப்படுத்தலின் எண்ணக்கரு ரீதியான சட்டகத்திற்கேற்ப** பின்வருவனவற்றுள் பொறுப்பொன்றின் பண்பு/ பண்புகளாகக் காணப்படுபவை எவை?

A - அதனுடன் தொடர்புடையதாக நிறுவனத்திற்கு நிகழ்காலக் கடப்பாடொன்று காணப்படல்.
B - அதன் பெறுமதியினை அல்லது தீர்வு செய்யக்கூடிய பெறுமதியினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாக இருத்தல்.
C - அதனைத் தீர்க்கும்போது எதிர்கால பொருளாதார நலன்களைப் பெற்றுத் தரக்கூடிய வளங்கள் வணிகத்திலிருந்து வெளிச் செல்லக்கூடிய தன்மை காணப்படல்.

(1) A மாத்திரம். (2) A, B மாத்திரம். (3) A, C மாத்திரம்.
(4) C மாத்திரம். (5) A, B, C அனைத்தும். (..............)

08. 2000 ஆம் ஆண்டில் ரூபா 2 000 000 க்கு கொள்வனவு செய்யப்பட்ட காணியொன்று 2016.03.31 ஆம் திகதி நிதிக் கூற்றில் ரூபா 5 000 000 மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் காட்டப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் **பின்பற்றப்படாத** கணக்கீட்டு எண்ணக்கருவும், **மீள் மதிப்பீட்டு பெறுமதியை பதிவு செய்ததன்** மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற தரரீதியான பண்பும் எவை?

	எண்ணக்கரு	**தரரீதியான பண்புகள்**
(1)	அலகு சார்	பொருத்தமானதென
(2)	பொருத்தம்	நம்பகமான பிரதிநிதித்துவம்
(3)	வரலாற்றுக் கிரயம்	விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.
(4)	வரலாற்றுக் கிரயம்	ஒப்பிடக்கூடியதென
(5)	வரலாற்றுக் கிரயம்	பொருத்தமானதென

(.............)

09. கம்பனியொன்றின் **இருப்பு** தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

திகதி	விபரம்	மொத்தப் பெறுமதி (ரூபா 000)	அலகொன்றின் கொள்வனவு விலை (ரூபா 000)	அலகொன்றின் விற்பனை விலை (ரூபா 000)
2016/1/01	இருப்பு	1 500	15	-
2016/1/05	கொள்வனவு	4 000	20	-
2016/1/10	விற்பனை	3 500	-	35
2016/1/15	கடன்பட். திருப்பி அனுப்பியது	700	-	-
2016/1/20	கொள்வனவு	2 500	25	-
2016/1/30	விற்பனை	2 000	-	25

- முதல் வந்தது முதல் செல்லல் முறையில் (FIFO) இருப்பு விநியோகிக்கப்படுகின்றது.

2016.01.31 ம் திகதியில் **எஞ்சிய இருப்பின் பெறுமதியும்** 2016.01.31 ஆம் திகதியில் முடிவடையும் மாதத்திற்கான **மொத்த இலாபமும்** முறையே

	எஞ்சிய சரக்கிருப்பு (ரூபா 000)		**மொத்த இலாபம் (ரூபா 000)**
(1)	3 200	உம்	4 100 ஆகும்.
(2)	3 500	உம்	5 500 ஆகும்.
(3)	4 500	உம்	3 100 ஆகும்.
(4)	5 300	உம்	2 100 ஆகும்.
(5)	7 000	உம்	4 500 ஆகும்.

(.............)

10. **பியசீலி வணிகத்தின்** 2016 சனவரி மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களும் மேலதிகத் தகவல்களும் பின்வருமாறு.

- பொருட்களின் கடன் கொள்வனவு ரூபா 20 000 வாக இருந்ததுடன் இவற்றுள் ரூபா 15 000 பெறுமதியான பண்டங்கள் மாதத்தினுள் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பு ரூபா 3 000 ஆகும். கடந்த வருடத்தில் பதிவழிக்கப்பட்ட ரூபா 1 000 பெறுமதியான அறவிடமுடியாக்கடன் சனவரி மாதத்தினுள் மீளக் கிடைக்கப் பெற்றது.
- சனவரி மாதத்திற்கான கிடைத்த மின் பட்டியல் ரூபா 5000 ஆகும். 2016 பெப்ரவரி 10 ஆம் திகதி அது செலுத்தப்பட்டது.
- 2016 சனவரி மாதத்திற்குரிய சம்பளமான ரூபா 10 000 அம்மாதத்தினுள் செலுத்தப்படவில்லை என்பதுடன், 2015 டிசம்பர் மாதத்திற்குரிய சம்பளம் ரூபா 8 000 செலுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட வணிகத்தின் 2016 சனவரி மாதத்தில் வருமானத்திற்கெதிராக சீராக்க வேண்டிய மொத்தச் செலவுகள் எவ்வளவு?

(1) ரூபா 24 000 (2) ரூபா 25 000 (3) ரூபா 32 000
(4) ரூபா 36 000 (5) ரூபா 41 000 (.............)

[பக். 4 ஐப் பார்க்க.

11. **கணக்குகளை உரிய முறையில் அறிக்கைப்படுத்தாத** வணிகமொன்றின் 2016.03.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

		ரூபா
விற்பனை		500000
கொள்வனவு		400000
பற்று :	காசு	30000
	பொருட்கள்	70000
2016.03.31 ல் இருப்பு		80000

- மொத்த இலாப வீதம் 40% ஆகும்.

2015.04.01 இல் இருப்பின் பெறுமதியாக இருப்பது,

(1) ரூபா 20 000 ஆகும். (2) ரூபா 50 000 ஆகும். (3) ரூபா 80 000 ஆகும்.
(4) ரூபா 90 000 ஆகும். (5) ரூபா 120 000 ஆகும். (.............)

12. **சக்தி விளையாட்டுக் கழகத்தின்** 2016.03.31 இல் அங்கத்தவர் எண்ணிக்கை 150 ஆகும் இதில் 50 பேர் ஆயுட்கால அங்கத்தவர்களாவர். எஞ்சிய அங்கத்தவரொருவரின் வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூபா 1 000 ஆகும். 12 அங்கத்தவர்கள் 2015/16 வருடத்திற்கான அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தவில்லை. 8 அங்கத்தவர்கள் 2016/17 ஆண்டிற்கான அங்கத்துவப் பணத்தையும் செலுத்தி இருந்தனர். ஆயுட்கால அங்கத்துவக் கட்டணக் கணக்கின் 2015/04/01 இல் மீதி ரூபா 200 000 ஆகும். இதில் 10% மான தொகை 2015/16 ம் வருடத்தில் அங்கததுவக் கட்டண வருமானமாக வருமான செலவுக் கணக்கிற்கு மாற்றப்படும். வருட ஆரம்பத்தில் நிலுவை அல்லது முற்பண அங்கத்துவக் கட்டணம் எதுவுமில்லை.

2015/16 ஆம் வருடத்தில் வருமானமாக இனங்காணவேண்டிய அங்கத்துவக் கட்டணப் பெறுமதியும், வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற அங்கத்துவக் கட்டணமும் எவ்வளவு?

	வருமானமாக இனம்காணப்பட வேண்டிய பெறுமதி (ரூபா)	**வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற அங்கத்துவக் கட்டணம் (ரூபா)**
(1)	96 000	120 000
(2)	120 000	100 000
(3)	120 000	96 000
(4)	120 000	120 000
(5)	150 000	96 000

(.............)

▲ **வினா இலக்கம் 13ம் 14ம் 15ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

ஹரி, மறி, சிறி என்பவர்களால் நடாத்திச் செல்லப்பட்ட பங்குடமை வணிகத்தின் 2016.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கு தயாரித்த இலாபப் பகிர்வு கூற்று பின்வருமாறு.

			(ரூபா 000)
நிதியாண்டின் தேறிய இலாபம்			1 200
மூலதன வட்டி	- ஹரி	200	
	- மறி	100	
	- சிறி	100	(400)
சம்பளம்	- ஹரி	100	
	- மறி	100	(200)
இலாப பங்கு	- ஹரி	300	
	- மறி	200	
	- சிறி	100	(600)
			-

* 2015.04.01 இல் பங்குடமை வணிகத்தின் நடைமுறைக் கணக்கு மீதிகள் பின்வருமாறு.

		(ரூபா)
ஹரி	-	20 000
மறி	-	40 000
சிறி	-	50 000

[பக். 5 ஐப் பார்க்க.

* நடப்பாண்டில் ஹரி ரூபா 80 000 ஐப் பற்றியுள்ளார்.
* பங்காளர்கள் ஆரம்ப மூலதன மீதியினடிப்படையில் வருடாந்தம் 5% வட்டி பெற உரித்துடையவர்கள். **2015.10.01 இல் மறி மூலதன வட்டியாக ரூபா 50 000 ஐ காசாக எடுத்துள்ளார்.**
* 2015.04.01 இல் மறி ரூ 60 000 வருடாந்த வாடகையில் மோட்டார் வாகனமொன்றை பங்குடமை வணிகத்துக்கு வழங்கியிருந்தார். 2016.03.31 ஆம் திகதியாகும்போது வருடாந்த வாடகை செலுத்தப்படாதிருந்ததுடன் அது வருமானக் கூற்றில் சரியாக அறிக்கைப்படுத்தப்பட்டிருந்தது.
* 2016.03.31 இல் சிறி பங்குடமை வணிகத்திலிருந்து ஓய்வு பெற்றதுடன் அத்திகதியில் மொத்த நன்மதிப்பானது ரூ 600 000 ஆக மதிப்பிடப்பட்டதுடன் அதனை பங்காளரின் மூலதனக் கணக்கினூடாக சீராக்கம் செய்வதற்கு பங்காளர் இணங்கினர். சிறிக்கு செலுத்தவேண்டிய உரிமைத் தொகை கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டது.
* புதிய பங்குடமையின் இலாபப்பகிர்வு வீதம் ஹரி, மறி இடையே முறையே 2:1 ஆகும்.

13. 2016.03.31 இல் பங்காளரின் நடைமுறைக் கணக்கு மீதிகளாக அமைவன :

	ஹரி (ரூ 000)	**மறி (ரூ 000)**
(1)	500	400
(2)	540	450
(3)	540	500
(4)	620	440
(5)	620	500

(..............)

14. 2016.03.31 பங்காளரின் மூலதனக் கணக்கில் மீதிகளாகக் காணப்படும் தொகை :

	ஹரி (ரூ 000)	**மறி (ரூ 000)**
(1)	1 300 ம்	1 200 ஆகும்.
(2)	1 900 ம்	1 000 ஆகும்.
(3)	3 900 ம்	2 000 ஆகும்.
(4)	3 900 ம்	2 200 ஆகும்.
(5)	4 200 ம்	2 200 ஆகும்.

(..............)

15. 2016.03.31 இல் பங்குடமை வணிகத்தின் மொத்த உரிமையும் கடனும் முறையே :

	உரிமை (ரூ 000)	**கடன் (ரூ 000)**
(1)	990	250
(2)	5 900	2 100
(3)	5 900	2 300
(4)	5 900	0
(5)	6 890	2 350

(..............)

16. கணக்கீட்டுக் கொள்கை, கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றம் மற்றும் வழுக்கள் தொடர்பான நியமத்திற்கு (LKAS 8) ஏற்ப பின்வருவனவற்றுள் மதிப்பீட்டு மாற்றங்களாக குறிப்பிடக்கூடிய கூற்றுகள் எவை?

A - கடந்த வருடமொன்றில் பதிவழிக்கப்பட்ட ரூ 50 000 கடன்பட்டோரின் கடன் தொகையொன்று நடப்பாண்டில் கிடைக்கப்பெறல்.

B - இருப்பு மதிப்பீட்டு முறையாகிய FIFO (முதல் வந்தது முதல் செல்லல்) முறைக்குப் பதிலாக நடப்பாண்டில் (நிறையிடப்பட்ட சராசரி முறை) WAC பயன்படுத்தப்படல்.

C - நடைமுறையாண்டில் இருந்து ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வானது நேர்கோட்டு முறையிலிருந்து ஒடுங்குபாக முறைக்கு மாற்றப்படுதல்.

D - கட்டடம் நவீனமயப்படுத்தல் காரணமாக அதன் பயன்பாடு ஆயுட்காலம் 10 வருடங்களிலிருந்து 12 வருடங்கள் வரை அதிகரித்திருப்பதாக தீர்மானிக்கப்படல்.

மேற்குறிப்பிட்டவைகளில் மதிப்பீட்டு மாற்றங்களாக குறிப்பிடக்கூடியன :

(1) A, C மாத்திரம்.

(2) A, D மாத்திரம்.

(3) A, B, C மாத்திரம்.

(4) A, C, D மாத்திரம்.

(5) B, C, D மாத்திரம். (..............)

[பக். 6 ஐப் பார்க்க.

- **2016.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வரையறுக்கப்பட்ட மாலிங்க பொதுக்கம்பனியின் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 17 ஆம் 18 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

	(ரூபா 000)
நிதியாண்டுக்குரிய இலாபம்	1 400
செயற்பாட்டுச் செலவுகள்	900
பங்கிலாபம் செலுத்தியது	100
நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்பு (2015.04.01)	1 800
இயந்திர மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் (2015.04.01)	300
கம்பனியின் கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்	2 000

* 2016.03.31 இல் முடிவடைந்த வருடத்தில் இயந்திர மீள்மதிப்பீட்டில் ரூபா 200 000 நட்டமொன்று அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளதுடன், மோட்டார் வாகனத்தை முதல் முறையாக மீள்மதிப்பீடு செய்தபோது ரூபா 100 000 இலாபம் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.

17. 2016.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான **ஏனைய விரிவான வருமானங்கள், மொத்த விரிவான வருமானங்கள்** எவ்வளவு?

	ஏனைய விரிவான வருமானங்கள் (ரூபா 000)	**மொத்த விரிவான வருமானங்கள் (ரூபா 000)**
(1)	(100)	1 600
(2)	(100)	1 300
(3)	200	1 600
(4)	(300)	1 400
(5)	500	1 500

(.............)

18. 2016.03.31 இல் உள்ளவாறான கம்பனியின் மீள் மதிப்பீட்டு ஒதுக்கமும், அத்திகதியில் கம்பனியின் மொத்த உரிமையும்

	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் (ரூபா 000)	**மொத்த உரிமை (ரூபா 000)**
(1)	100	3 900
(2)	200	3 900
(3)	200	5 300
(4)	300	5 500
(5)	400	5 400

(.............)

19. வரையறுக்கப்பட்ட **சுலோச்சனா** பொதுக்கம்பனியின் 2016.03.31 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

	(ரூபா 000) வரவு	**செலவு**
வருமானவரி கொடுப்பனவு - 2015/2016	300	
- 2014/2015	285	
வருமானவரிக்கான ஏற்பாடு (2014/2015)		350

2014/2015 ம் வருடத்திற்கான வருமானவரி ரூபா 325 000 என வருமான வரித்திணைக்களத்துடன் இணக்கம் காணப்பட்டுள்ளது. 2016/03/31 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமானவரி ரூபா 350 000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தகவல்களின் உதவியுடன் நிதிக் கூற்றினுள் உள்ளடக்கவேண்டிய சரியான பெறுமதிகள் என்ன?

	வருமானவரிச் செலவு (ரூபா)	**வருமானவரிப் பொறுப்பு (ரூபா)**
(1)	325 000	50 000
(2)	325 000	65 000
(3)	325 000	90 000
(4)	350 000	65 000
(5)	350 000	90 000

(.............)

[பக். 7 ஐப் பார்க்க.

20. 2015.04.01 இல் **வரையறுக்கப்பட்ட "மயூரி" பொதுக்கம்பனியின்** வழங்கப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கை 400 000 ஆகவும் கூறப்பட்ட சாதாரண பங்குகளின் மூலதனக் கணக்கு மீதி ரூபா 10 000 000 வாகவும் காணப்பட்டது. 2015.10.01 இல் காணப்பட்ட 4 சாதாரண பங்குகளுக்கு 1 பங்கு என பங்கொன்று ரூபா 25 வீதம் ஒதுக்கம் மூலதனவாக்கம் செய்யப்பட்டது. அத்துடன், 2016.03.01 ம் திகதியன்று காணப்பட்ட ஒவ்வொரு சாதாரண பங்குகள் 5 இற்கு 1 பங்கு விதம் பங்கொன்று ரூபா 20 ப்படி உரிமை வழங்கல் மேற்கொள்ளப்பட்டது. பங்காளர்கள் சகல உரிமைகளையும் பெற்றுக் கொண்டனர்.

இக்கொடுக்கல் வாங்கல் காரணமாக 2016.03.31 ம் திகதி கம்பனியின் உரிமையில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு எவ்வளவு?

(1) ரூபா 2 000 000 ஆல் அதிகரிக்கும். (2) ரூபா 2 000 000 ஆல் குறைவடையும்.
(3) ரூபா 2 500 000 ஆல் அதிகரிக்கும். (4) ரூபா 4 500 000 ஆல் அதிகரிக்கும்.
(5) ரூபா 4 500 000 ஆல் குறைவடையும். (..............)

21. பின்வரும் எவ்விடயம் கம்பனியொன்றின் மொத்த உரிமை மாற்றம் தொடர்பில் **பொருத்தமற்றதாகும்.**

A பங்காளர்களுக்கு பங்கிலாபம் செலுத்துதல்.
B அட்டுறு கணக்காய்வினைப் பதிவு செய்தல்.
C ஒதுக்கத்தை மூலதனமாக்கல்.
D உரிமை வழங்கலை மேற்கொள்ளல்.
E சாதாரண பங்காளர்களுக்கு இறுதிப்பங்கிலாபத்தை முன்மொழிதல்.

(1) A யும் B யும் மாத்திரம். (2) A யும் C யும் மாத்திரம். (3) A யும் E யும் மாத்திரம்.
(4) B யும் C யும் மாத்திரம். (5) C யும் E யும் மாத்திரம். (..............)

22. **நலன்புரி சங்கமொன்றின்** 2015 ஆம் நிதியாண்டுக்குரிய தகவல்களில் சில பின்வருமாறு,

	2015/12/31	**2015/01/01**
திரண்ட நிதி	420 000	350 000
நிலுவை அங்கத்துவச் சந்தா	30 000	20 000

மேலதிக தகவல்கள் :

1. சங்கத்தினால் வருடத்தினுள் செலவிடப்பட்ட தொகை ரூபா 120 000 ஆகும்.
2. வருடத்தினுள் கிடைத்த நன்கொடை ரூபா 50 000 ஆகும்.
3. வருடத்தினுள் கிடைத்த அங்கத்துவச் சந்தா ரூபா 50 000 ஆகும்.
4. சங்கத்தினால் சிற்றூண்டிச்சாலையொன்று நடாத்திச் செல்லப்படுகின்றது.

2015/12/31 இல் முடிவடைந்த வருடத்தினுள் சிற்றூண்டிச்சாலையிலிருந்து கிடைத்த இலாபம்.

(1) ரூபா 80 000 ஆகும். (2) ரூபா 90 000 ஆகும். (3) ரூபா 100 000 ஆகும்.
(4) ரூபா 130 000 ஆகும். (5) ரூபா 140 000 ஆகும். (..............)

23. வரையறுக்கப்பட்ட **"தேசப்பிரியா"** கம்பனியின் நிதிக் கூற்றுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

	2016/3/31 ம் திகதி (ரூபா)	**2015/3/31 ம் திகதி (ரூபா)**
சரக்கிருப்பு	240 000	160 000
வியாபார. கிடைக்கவேண்டியவை	40 000	60 000

I 2016/03/31 இல் முடிவடையும் வருடத்திற்கான விற்பனை ரூபா 800 000 ஆகவும் அவற்றில் கடன்விற்பனை ரூபா 500 000 ஆகவும் காணப்பட்டது.
II மொத்த இலாப வீதம் 25% ஆகும்.

2016/03/31 இல் முடிவடையும் வருடத்திற்கான **இருப்புப் புரள்வு விகிதம், கடன் பட்டோர் புரள்வு விகிதம்** என்பன முறையே

	இருப்பு புரள்வு விகிதம்		**கடன்பட்டோர் புரள்வு விகிதம்**
(1)	2.5	உம்	12.5 உம் ஆகும்.
(2)	3	உம்	10 உம் ஆகும்.
(3)	3	உம்	16 உம் ஆகும்.
(4)	4	உம்	10 உம் ஆகும்.
(5)	4	உம்	16 உம் ஆகும்.

(..............)

[பக். 8 ஐப் பார்க்க.

24. **"சரசு"** பூந்தொட்டி உற்பத்தி வணிகத்தின் 2016 மார்ச் மாதத்தின் சம்பளம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு,

	ரூபா
ஊழியர்களுக்கு செலுத்திய சம்பளம்	83 000
ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழித்தவை	
விழா முற்பணம்	12 000
சம்பள முற்பணம்	15 000
EPF	10 000
தொழில் வழங்குநர் பங்களிப்பு	
EPF	15 000
ETF	3 000

2016 மார்ச் மாதத்தில் ஊழியர் மொத்தச் சம்பளமும் நிறுவனத்தின் ஊழியர்களுடன் தொடர்புடைய மொத்த செலவும் எவ்வளவு?

	ஊழியர் மொத்தச் சம்பளம் (ரூபா)	**ஊழியர் தொடர்பான மொத்தச் செலவு (ரூபா)**
(1)	83 000	101 000
(2)	101 000	83 000
(3)	102 000	83 000
(4)	120 000	138 000
(5)	138 000	120 000

(..............)

25. பின்வருவனவற்றுள் **பொருளாதார கட்டளை அளவின் மாதிரிக்கு** (EOQ) **சரியான** கருதுகோள்கள் எவை?

A நிலையானதும் தெரிந்ததுமான இருப்பை பெற்றுக்கொள்ளும் கிரயமொன்று உள்ளதென.
B நிலையானதும் தெரிந்ததுமான வைப்பு கிரயமொன்று காணப்படுகின்றதென.
C கட்டளையிடும் முழுத் தொகையும் ஒரே முறையில் கிடைக்கின்றதென.
D மறு கட்டளை மட்டத்திற்கு வந்தவுடன் மீண்டும் இருப்பு பெற்றுக் கொள்ளப்படுமென.

(1) A யும் B யும் மாத்திரம். (2) A, B, C மாத்திரம். (3) A, B, D மாத்திரம்.
(4) B, C, D மாத்திரம். (5) A, B, C, D அனைத்தும். (..............)

26. **ருவன்** உற்பத்தி வணிகத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்ற பலகையினாலான விளையாட்டு வண்டி தொடர்பான பொது மேந்தலைக் கிரயத் தகவல்கள் பின்வருமாறு.

	உண்மையானது	**மதிப்பிடப்பட்ட**
மொத்த பொது மேந்தலைக்கிரயம்	ரூபா 160 000	ரூபா 200 000
மொத்த நேர்க்கூலி மணித்தியாலங்களின் எண்ணிக்கை	10 000	8 000
அலகொன்றை உற்பத்தி செய்வதற்கு எடுக்கின்ற நேர் ஊழிய மணித்தியாலங்கள்	2	3

- பொது மேந்தலைக் கிரயமானது **நேர் ஊழிய மணித்தியாலத்தின் அடிப்படையில் உறிஞ்சல்** செய்யப்படுகின்றது.

அலகொன்றிற்கு உறிஞ்சல் செய்யப்படுகின்ற பொது மேந்தலைக் கிரயத்தின் பெறுமதி

(1) ரூபா 32 ஆகும். (2) ரூபா 40 ஆகும். (3) ரூபா 48 ஆகும். (4) ரூபா 50 ஆகும். (5) ரூபா 75 ஆகும்.

(..............)

27. பின்வரும் கிரய வகைகளுள் **"இருப்பு மதிப்பீடு"** தொடர்பில் பயன்படுத்தப்படுகின்ற கிரயம் எது?

A - நேர் உற்பத்திக் கிரயம்
B - உற்பத்தி பொது மேந்தலைக் கிரயம்
C - சந்தர்ப்ப கிரயம்
D - உற்பத்தியல்லாத கிரயம்

(1) A மாத்திரம். (2) B மாத்திரம். (3) A, B மாத்திரம்
(4) A, B, C மாத்திரம். (5) A, B, C, D அனைத்தும். (..............)

[பக். 9 ஐப் பார்க்க.

28. ஏனைய காரணிகள் நிலையாகக் காணப்படும்போது சமப்பாட்டுப்புள்ளி (BEP) தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களில் **பிழையான** கூற்று எது?
(1) விற்பனை அளவு அதிகரிப்பதன் காரணமாக சமப்பாட்டு அலகின் பெறுமதி குறைவடையும்.
(2) மொத்த நிலையான கிரயம் குறைவதன் காரணமாக சமப்பாட்டு அலகுகளின் பெறுமதி குறைவடையும்.
(3) அலகொன்றிற்கான விற்பனை விலை அதிகரிப்பதன் காரணமாக சமப்பாட்டு அலகுகளின் எண்ணிக்கை குறைவடையும்.
(4) அலகொன்றின் மாறும் கிரயம் அதிகரிப்பதன் காரணமாக சமப்பாட்டு அலகுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.
(5) விற்பனை அளவு அதிகரிப்பதன் காரணமாக சமப்பாட்டு அலகுகளின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படாது.
(..............)

29. கம்பனியொன்று உற்பத்தி செய்வதற்கு உத்தேசிக்கும் X பொருள் தொடர்பிலான உற்பத்தி மட்டமும் மொத்தக்கிரயமும் கீழே தரப்பட்டுள்ளது.

உற்பத்தி மட்டம் (அலகு)	மொத்தக்கிரயம் (ரூபா)
5000	500 000
6000	540 000

அலகொன்றிற்கான மாறும் கிரயமும், மொத்த நிலையான கிரயமும் முறையே,

	அலகொன்றிற்கான மாறும் கிரயம் (ரூபா)		**மொத்த நிலையான கிரயம் (ரூபா)**	
(1)	40	உம்	200 000	ஆகும்.
(2)	40	உம்	300 000	ஆகும்.
(3)	50	உம்	300 000	ஆகும்.
(4)	90	உம்	200 000	ஆகும்.
(5)	100	உம்	300 000	ஆகும்.

(..............)

30. கம்பனியொன்று புதிய வடிவத்திலான அச்சிடல் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடுகின்றது. இந்த இயந்திரத்துடன் தொடர்புடைய பின்வரும் தகவல்கள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

	ரூபா 000
A - இயந்திரத்தை கையகப்படுத்தும் கிரயம்	3 000
B - பொருத்துதல் கட்டணம்	400
C - இயந்திரத்தின் வருடாந்த தேய்வு	300
D - இடத்தை ஒழுங்குபடுத்தும் செலவு	200
E - இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக ஏற்பட்ட வியாபாரப் பேறினை ஆய்வு செய்யும் கிரயம்	100

மேற்குறிப்பிட்ட தகவல்களில் **காசுப்பாய்ச்சலை மதிப்பீடு செய்வதற்கு** எவ்வுறுப்படிகள் உள்ளடக்கப்படும்?

(1) A, B, C மாத்திரம். (2) A, B, D மாத்திரம். (3) A, B, E மாத்திரம்.
(4) A, C, D மாத்திரம். (5) A, B, C, D, E அனைத்தும். (..............)

31. வணிகமொன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கல் காரணமாக **சொத்து, பொறுப்பு, உரிமை** என்பவற்றில் ஏற்படும் தாக்கத்தை "குறையும்", "அதிகரிக்கும்", "மாற்றமில்லை" என்றவாறு காட்டுக.

	சொத்து	பொறுப்பு	உரிமை
(1) உரிமையாளர் தனது சொந்தப் பணத்தில் அட்டுறு செலவொன்றை செலுத்துதல்	....	....	....
(2) கடன்பட்டோரில் ஐயக்கடனுக்காக ஏற்பாடு செய்தல்	....	....	....
(3) வங்கி மேலதிகப்பற்றொன்று காணப்படும்போது வங்கியில் காசு வைப்பிலிடல்	....	....	....
(4) முற்பணமாக பெற்ற கட்டட வாடகை	....	....	....

32. வணிகமொன்றின் சில்லறை காசு வசக்கட்டு தொடர்பிலான தகவல்கள் பின்வருமாறு

			ரூபா
சில்லறை காசேட்டின் மீதி	-	2016.01.01	600
	-	2016.01.31	400
மீள் நிரப்பல்		2016.01.01	1 900

சில்லறை காசுவசக்கட்டின் பெறுமதி ரூபா 500 ஆல் அதிகரிக்கப்படுமாயின் 2016.02.01 ஆம் திகதி மீள் நிரப்பப்படும் தொகை எவ்வளவு?
....

[பக். 10 ஐப் பார்க்க.

33. 2016.03.31 இல் வணிகமொன்றின் வங்கிக் கூற்றின்படி வங்கிக் கணக்கில் சாதகமான மீதி ரூபா 630 000 ஆகும். எனினும் அது அத்திகதியில் காணப்பட்ட வணிகத்தின் வங்கிக்கணக்கின் மீதியிலிருந்து வேறுபட்டிருந்தது. அவ்வேறுபாட்டிற்கான காரணிகள் பின்வருமாறு.

(i) நிலையியற் கட்டளைப்படி செலுத்திய கடன் தவணைக் கட்டணம் ரூபா 10 000 ஆகும்.

(ii) வைப்புச் செய்யப்பட்டும் இன்னும் தீர்வையாகாத காசோலைகளின் பெறுமதி ரூபா 40 000 ஆகும்.

(அ) 2016.03.31 ஆல் திருத்த முன்னர் வணிகத்தின் வங்கிக்கணக்கின் மீதி எவ்வளவு? ....

(ஆ) 2016.03.31 ஆம் திகதி நிதி நிலமைக் கூற்றில் காட்டப்படுகின்ற வங்கி மீதி எவ்வளவு? ?.............................

34. பின்வரும் வழுக்களினால் வணிகமொன்றின் பரீட்சைமீதியின் மாற்றம் **"ஏற்படும்", "ஏற்படாது"** என்பதைக் குறிப்பிடுக.

(1) ரூபா 40 000 விற்பனைப்பட்டியல் ஏடுகளில் விடுபடல் ....

(2) ரூபா 15 000 வங்கி மேலதிகப் பற்று சாதகமான மீதியாக பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படுதல். ....

(3) கொடுத்த கழிவு ரூபா 4 000 பெற்ற கழிவுக்கணக்கில் வரவு வைக்கப்படல் ....

(4) அறவிடமுடியாக்கடன் பதிவழிப்பு ரூபா 30 000 கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் உரிய கடன்பட்டோர் கணக்கில் பதிவு செய்யப்படாதிருத்தல் ....

35. நிதி அறிக்கைப்படுத்தலின் எண்ணக்கரு ரீதியான சட்டகத்திற்கு ஏற்ப பொது நோக்க நிதி அறிக்கைப்படுத்தலின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

....

....

....

....

36. வியாபாரத்திலீடுபட்டுள்ள வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்றின் பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் மிகப்பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவினைக் குறிப்பிடுக.

சந்தர்ப்பம்	எண்ணக்கரு
A - நிதி நிலமைக்கூற்றில் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் நடைமுறை, நடைமுறை அல்லாதது என வகைப்படுத்துதல்.	....
B - ஒவ்வொரு நிதியாண்டிற்கும் வருமானக் கூற்றொன்றைத் தயாரித்தல்.	....
C - வருடத்தினுள் செலுத்திய வாடகை ரூபா 500 000 மாக இருந்தாலும் வருமானக் கூற்றில் ரூபா 600 000 மாக அறிக்கைப்படுத்தப்படுதல்.	....
D - நிதிக் குத்தகை முறையில் பெற்றுக்கொண்ட மோட்டார் வாகனத்தின் பெறுமதியினை நிதி நிலமைக் கூற்றில் சொத்தொன்றாக காட்டியிருத்தல்.	....

▲ **37 ஆம் 38 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்கள் நிறுவனமொன்றின் இரு சொத்துக்கள் தொடர்பானவையாகும்.

சொத்து	கிரயம் (ரூ 000)	பயன்படு ஆயுட்காலம் (வருடங்கள்)	இழிவுப் பெறுமதி (ரூ000)	2015.04.01 ல் திரண்ட தேய்வு (ரூ 000)
மோட்டார் வாகனம்	4 000	10	400	1 800
இயந்திரம்	2 000	5	200	720

* 2015.04.01 இல் மோட்டார் வாகனத்தின் பெறுமதியினை அதிகரிப்பதற்காக ரூபா 600 000 செலவழிக்கப்பட்டது. அதன் காரணமாக மோட்டார் வாகனத்தின் எஞ்சிய பயன்படு ஆயுட்காலம் 06 வருடங்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இழிவுப் பெறுமதியில் மாற்றமில்லை.

* 2016.03.31 ஆல் திகதி வணிகத்திடம் காணப்பட்ட இயந்திரம் ரூபா 1 500 000 க்கு விற்பனை செய்யப்பட்டது.

[பக். 11 ஐப் பார்க்க.

37. 2016.03.31 ஆம் திகதியில் முடிவடையும் வருடத்திற்கான மோட்டார் வாகனத்தின் வருடாந்த தேய்வின் பெறுமதி எவ்வளவு?

....

38. வணிகத்தின் இயந்திரத்தை அகற்றியதன் இலாபம் / நட்டம் எவ்வளவு?

....

▲ **வினா இலக்கம் 39 ஆம் 40 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

கல்யாணி, நதீமா 3 : 2 என்ற விகிதத்தில் இலாபநட்டங்களைப் பகிர்ந்துகொண்டு நடாத்திச் சென்ற பங்குடமை வணிகத்தின் 2016.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் தகவல்கள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

* வருடாந்தச் சம்பளம் கல்யாணிக்கும் நதீமாவுக்கு முறையே ரூபா 100 000, ரூபா 60 000 ஆகும்.
* கல்யாணி, நதீமா என்போருக்கு முறையே ரூபா 60 000 , ரூபா 40 000 இறுதிப்பங்கிலாபமாகப் பகிரப்பட்டிருந்தது.
* 2016.03.25 ஆம் திகதி எதிர்வரும் வருட விற்பனைக்காக காசோலை மூலம் கிடைத்த முற்பணம் ரூபா 100 000 ஐ நதீமா தனது சொந்த தேவைக்காக எடுத்துச் சென்றுள்ளார். இது தொடர்பில் ஏடுகளில் எப்பதிவும் செய்யப்படவில்லை.
* கல்யாணி, 2015.04.01 இல் வணிகத்திற்கு ரூபா 400 000 கடன் தொகையொன்றை வழங்கியிருந்ததுடன், அதற்காக செலுத்த வேண்டிய 10% வருடாந்த கடன் வட்டி தொடர்பில் எவ்விதப்பதிவுகளும் செய்யப்படவில்லை.

39. 2016.03.31 இல் முடிவடையும் வருடத்தினுள் பங்குடமை வணிகம் உழைத்துள்ள தேறிய இலாபத்தின் சரியான பெறுமதி ....

40. ஆரம்ப இருப்பு எதுவும் காணப்படவில்லை எனக்கருதி 2016.03.31 இல் கல்யாணி, நதீமா என்போரின் நடைமுறைக் கணக்கு மீதிகளைக் கணிக்க.

கல்யாணி ரூபா ....

நதீமா ரூபா ....

41. LKAS 37 இற்கேற்ப **ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள்** என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

ஏற்பாடுகள்	**நிகழத்தக்க பொறுப்புக்கள்**
(1)	(1) ....
....	....
(2)	(2) ....
....	....

42. வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றின் நிதியாண்டு 2016.03.31 ம் திகதியுடன் முடிவடைவதுடன், நிதிக் கூற்றுகள் அனுமதிக்கப்பட்ட திகதி 2016.05.30 ஆகும். அவ்விரு திகதிகளுக்குமிடையில் இடம்பெற்ற பின்வரும் நிகழ்வுகளை **"சீராக்கும் நிகழ்வுகள்", "சீராக்காத நிகழ்வுகள்"** என "√" அடையாளமிட்டு வகைப்படுத்திக் காட்டுக.

	சீராக்கும் நிகழ்வுகள்	**சீராக்காத நிகழ்வுகள்**
(1) சாதாரண பங்குகளுக்கு பங்கிலாபத்தை பிரேரித்தல்.	....	....
(2) இழப்பீடு ஒதுக்கப்பட்டுள்ள வழக்கொன்றின் தீர்ப்பு கிடைத்தல்.	....	....
(3) முதலீடுகளின் விலை குறைவடைதல்.	....	....
(4) நிதியாண்டின் இறுதித்திகதியில் கடன்பட்டோர் ஒருவர் முறிவடைதல்	....	....

43. **வரையறுக்கப்பட்ட அமாலி பொதுக் கம்பனியின்** 2016.03.31 இல் நிதி நிலமைக் கூற்றின் பிரித்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் பின்வருமாறு.

(ரூபா 000)

கூறப்பட்ட மூலதனம்		
சாதாரண பங்குகள் (10,000)		300
ஒதுக்கங்கள்		
பொது ஒதுக்கம்	40	
நிறுத்தி வைத்த உழைப்புகள்	18	58
மொத்த உரிமைகள்		358

[பக். 12 ஐப் பார்க்க.

மேலதிகத் தகவல்கள் :

(1) 2016.10.01 இல் தற்போதுள்ள சாதாரணப் பங்காளர்களுக்கு பங்கொன்று ரூபா 40 பெறுமதியில் ஒதுக்கங்கள் மூலதனவாக்கம் செய்யப்பட்டது.

(2) 2016.10.01 இல் பங்கொன்று ரூபா 20 ப்படி 5000 பங்குகள் உரிமை வழங்கல் மேற்கொள்ளப்பட்டது.

(அ) ஒதுக்கங்கள் மூலதனவாக்கம் செய்யப்பட்டதற்கான இரட்டைப் பதிவினைத் தருக.

....

....

....

(ஆ) மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கலின் பின்னர் 2016.10.01 இல் கம்பனியின் மொத்த உரிமையாண்மை பெறுமதி எவ்வளவு?

....

44. 2016.03.31 இல் முடிவடையும் வருடத்தில் **வரையறுக்கப்பட்ட விமுக்தி பொதுக்கம்பனி** ரூபா 20 ப்படி 500 000 சாதாரண பங்குகளை பகிரங்கமாக புதிதாக வழங்கியது. 750 000 பங்குகளுக்கான மொத்தக் காசும் விண்ணப்பத்துடன் கிடைக்கப்பெற்றது. 500 000 பங்குகள் விகிதாசாரப்படி ஒதுக்கம் செய்யப்பட்டதுடன், மேலதிகப்பணமானது விண்ணப்பதாரர்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

பின்வருவனவற்றுக்கு நாட்குறிப்புப்பதிவுகளை எழுதிக்காட்டுக. (விளம்பல் அவசியமில்லை.)

(அ) மேலதிக விண்ணப்பங்களுக்கான பணத்தொகையினை திருப்பி அனுப்புதல்.

....

....

(ஆ) பங்குகளை ஒதுக்குதல்.

....

....

45. பின்வரும் தகவல்கள் இரு கம்பனிகளுடன் தொடர்புடையதாகும்.

	பசிர் கம்பனி	**சமிர் கம்பனி**
கடன் உரிமை விகிதம்	2 : 1	1 : 2
இருப்புப்புரள்வு விகிதம்	6 தடவைகள்	10 தடவைகள்
வட்டி பாதுகாப்பு விகிதம்	5 தடவைகள்	6 தடவைகள்
மொத்த சொத்துக்களுக்கான அனுகூல வீதம்	35%	10%
விரைவு விகிதம்	2 : 1	0.5 : 1

	கம்பனி
(அ) திரவத்தன்மைக்கேற்ப மிகச் சிறந்த கம்பனி எது?	....
(ஆ) சொத்தினை வினைத்திறனாகப் பயன்படுத்தியுள்ள கம்பனி எது?	....
(இ) நீண்டகாலக் கடன் கொடுநர்களின் பாதுகாப்பு மிகச்சிறப்பாக உள்ள கம்பனி எது?	....
(ஈ) இழிவு இணைப்பினைக் கொண்டுள்ள கம்பனி எது?	....

46. **இருப்புக் கட்டுப்பாட்டின்போது** பின்வரும் கருமங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற ஆவணங்களைக் குறிப்பிடுக.

(i) பொருட்களை கொள்வனவு செய்யுமாறு களஞ்சியத்திலிருந்து கொள்வனவுப் பிரிவுக்கு வேண்டுகோள் விடுத்தல். ....

(ii) உற்பத்தி திணைக்களத்திற்குத் தேவையான பண்டங்களை கேட்டு வணிகத்தின் களஞ்சியச்சாலையிலிருந்து கோருதல். ....

(iii) கொள்வனவுப் பிரிவினால் வெளியக வழக்குநரொருவரிடம் பொருட்களை வேண்டுதல். ....

(iv) வழங்குநரிடமிருந்து பொருட்கள் பண்டகசாலைக்கு கிடைக்கப்பெற்றதை உறுதிப்படுத்துதல். ....

[பக். 13 ஐப் பார்க்க.

47. **சுந்தரம்** தேங்காயெண்ணை உற்பத்தி வணிகத்தின் **"கொப்பரா"** தொடர்பான பின்வரும் தகவல்கள் உங்களுக்கு வழங்கப்படுகின்றன.

உச்ச கட்டளைக் காலம்	6	நாட்கள்
இழிவு கட்டளைக் காலம்	2	நாட்கள்
இழிவு பாவனை - நாளொன்றிற்கு	60 kg	
மறு கட்டளை அளவு	500	அலகுகள்
உச்ச இருப்பு மட்டம்	980	அலகுகள்

ஒரு நாளிற்கான உச்ச பாவனை எவ்வளவு? ....

48. நிறுவனமொன்றில் கூலி கிரயக் கட்டுப்பாடு தொடர்பில் பயன்படுத்தப்படுகின்ற பின்வரும் அறிக்கைகள் **"தரித்திருக்கும் (இருந்த) காலம்"** அல்லது **"செயற்படு காலம்"** என்பதை அறிக்கைப்படுத்துவதற்கானதா என்பதை **"√"** அடையாளத்தை இட்டுக் காட்டுக.

அறிக்கைகள்	**தரித்திருக்கும் காலம்**	**செயற்படு காலம்**
(i) நாளாந்த நேர அட்டை	....	....
(ii) கைவிரல் அடையாள இயந்திரம்	....	....
(iii) கையொப்ப அட்டவணை	....	....
(iv) வேலை அட்டை	....	....

49. உற்பத்தி நிறுவனமொன்றின் பொது மேந்தலைக் கிரயத்துடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுக்கள் **உண்மை** அல்லது **பொய்** என்பதைக் குறிப்பிடுக.

	உண்மை/பொய்
A - **ஏற்பாடு** என்பது ஏதாவது கிரய மத்திய நிலையத்திற்குரியதென நேரடியாக இனம் காணக்கூடிய பொது மேந்தலைக் கிரயத்தை அதில் உள்ளடக்குதல்.	....
B - களஞ்சிய பொது மேந்தலைக் கிரயத்தை உற்பத்தி கிரய நிலையங்களுக்கு மீளப்பகிர்வு செய்யும் அடிப்படையொன்றாக **"தளப்பரப்பளவை"** பயன்படுத்த முடியும்.	....
C - மதிப்பிடப்பட்ட மொத்த பொது மேந்தலைக் கிரயத்தை உண்மையான அலகுகளின் எண்ணிக்கையினால் பிரிப்பதன் மூலம் **பொது மேந்தலைக் கிரய உறிஞ்சல் விகிதத்தை** கணிப்பிட முடியும்.	....
D - சேவைக்கிரய மத்திய நிலையங்களின் ஒன்று சேர்க்கப்பட்ட பொது மேந்தலைக் கிரயத்தை உற்பததி கிரய மத்திய நிலையங்களுக்கு இடையில் பகிர்வு செய்தல் **"மீள் பகிர்வு"** எனப்படும்.	....

50. "ரெனிஸ் பந்து" உற்பத்தி செய்யும் வணிகமொன்றின் கிரயத் தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

அலகொன்றின் மாறும் கிரயம் (ரூபா)	60
நிலையான கிரயம் (ரூபா)	100 000
பங்களிப்பு விற்பனை விகிதம்	40%

எதிர்பார்ப்பு விற்பனை 5000 அலகுகளின்போது பின்வருவனவற்றை கணிப்பிட்டுக் காட்டுக.

(அ) பாதுகாப்பு எல்லையில் ரெனிஸ் பந்துகளின் எண்ணிக்கை ....

(ஆ) எதிர்பார்ப்பு விற்பனை மட்டம் 5000 அலகுகளின்போது எதிர்பார்ப்பு இலாபம் ரூபா ....

* * *

க.பொ.த (உ.தர) உதவிக் கருத்தரங்கு - 2016

கணக்கீடு II

மூன்று மணித்தியாலம்

கவனிக்கவும் :

- ⋆ **முதலாம், இரண்டாம்** வினாக்கள் உட்பட **ஆறு** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.
- ⋆ ஒவ்வொரு வினாவிற்குமான விடையினை புதிய தாளில் ஆரம்பிக்குக.
- ⋆ செய்கைகளை விடைத்தாளுடன் இணைக்குக.

1. வரையறுக்கப்பட்ட சியாம் பொதுக்கம்பனியின் 2016.03.31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

	வரவு (ரூ.000)	செலவு (ரூ.000)
ஆதனம் பொறி மற்றும் உபகரணக் கிரயம் / மீள்மதிப். பெறுமதி	15 000	
2015.04.01 இல் இருப்பு	1 800	
கொள்வனவு	8 500	
வியாபாரக் கிடைக்கவேண்டியவைகள்	3 500	
கட்டட வாடகை	720	
10% மூன்றுமாத திறைசேரி உண்டியல்கள்	1 200	
ஊழியர் சம்பளம்	810	
குத்தகை வட்டி	465	
வரியும் காப்புறுதியும்	60	
மோட்டார் வாகன எரிபொருள் பராமரிப்பு செலவுகள்	80	
மின்சார தொலைபேசிக் கட்டணம்	320	
விற்பனை தரகு	52	
வங்கியிலுள்ள காசு	512	
விற்பனை		15 700
2015.04.01 இல் கூறப்பட்ட சாதாரண பங்குமூலதனம்		10 000
பொது ஒதுக்கம்		1 500
2015.04.01 இல் நிறுத்தி வைத்த உழைப்புகள்		944
குத்தகைக் கடன் கொடுநர்		1 200
வியாபார. செலுத்த வேண்டியவைகள்		1 535
2015.04.01 இல் ஆதனம் பொறி மற்றும் உபகரணத் திரண்ட தேய்வு		1 740
2015.04.01 இல் ஐயக்கடன் ஏற்பாடு		400
	33 019	33 019

மேலதிகத் தகவல்கள் :

2016.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றினைத் தயாரிக்க முன்னர் பின்வரும் விடயங்கள் சீராக்கப்படல் வேண்டும்.

(i) 2016.03.31 இல் இருப்பில் கிரயமும், தேறிய நிகரப் பெறுமதியும் முறையே ரூபா 1 500 000 வும் ரூபா 1 600 000 ஆகும். எவ்வாறாயினும் 2016.05.01 ல் முழுமையான இருப்பு ரூபா 1 450 000 இற்கு விற்பனை செய்யப்பட்டது. 2016.05.30 இல் இயக்குநர்களினால் கம்பனியின் நிதிக் கூற்று அங்கீகரிக்கப்பட்டது.

[பக். 2 ஐப் பார்க்க.

(ii) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் அமைப்பும் ஏனைய தகவல்களும் பின்வருமாறு.

சொத்து	**கிரயம் / நியாயமான பெறுமதி** 2016.03.31 இல் (ரூபா 000)	**திரண்ட தேய்வு** 2015.04.01 இல் (ரூபா 000)
காணி	8 000	-
நிர்வாகக் கட்டடம் (மீள் மதிப்பீட்டுக்கு முன்னர்)	5 000	1 500
விநியோக மோட்டார் வான்	1 200	
தளபாடங்களும் காரியாலய உபகரணங்களும்	800	240
	15 000	1 740

- நிர்வாகக் கட்டடம், தளபாடங்களும் காரியாலய உபகரணங்களும் கிரயத்தில் 10% உம் நேர்கோட்டு முறையில் தேய்விடப்படும்.

(iii) காணியானது 2013 ஆம் வருடத்தில் ரூபா 8 500 000 கொள்வனவு செய்யப்பட்டதுடன் 2014 இல் தொழில் ரீதியான கணிப்பீட்டாளர் ஒருவரினால் முதல் முறையாக ரூபா 8 000 000 க்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. 2016.03.31 இல் காணியானது மீண்டும் ரூபா 10 000 000 விற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

(iv) நிர்வாகக் கட்டடம் முதல் முறையாக 2016.03.31 இல் ரூபா 3 400 000 விற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

(v) ஆதனம் பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள விநியோக மோட்டார் வான் 2015.04.01 இல் நிதிக்குத்தகையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டதாகும். குத்தகைக் காலம் 4 வருடங்கள் என்பதுடன், அதன் பயன்படு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். குத்தகைக் கால முடிவில் சொத்தின் உரிமை கொள்வனவாளருக்கு **கிடைக்காது.** இதற்கு ஆரம்பக் கொடுப்பனவு எதுவுமில்லை என்பதுடன் செலுத்தப்பட்ட வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணம் குத்தகை வட்டிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. 4 வருடங்களுக்கான குத்தகை வட்டி பின்வருமாறு.

வருடம்	**வட்டி (ரூபா 000)**
2015/16	240
2016/17	195
2017/18	145
2018/19	80

(vi) திறைசேரி உண்டியலானது 2016.01.01 இல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

(vii) காட்சியறையாகவும் களஞ்சிய சாலையாகவும் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டடத்திகுரிய வருடாந்த வாடகையே கட்டட வாடகையாகக் காட்டப்பட்டுள்ளது. 2015.10.01 இல் இது வாடகைக்கு எடுக்கப்பட்டது. அத்துடன் 2016.03.31 இல் முடிவடையும் இறுதி காலாண்டிற்கான வரியும் காப்புறுதியும் ரூபா 80 000 நிலுவையாகவுள்ளது.

(viii) ஊழியர் சேமலாப நிதி (EPF) இற்கான ஊழியர்கள், வேலை வழங்குநர் பங்களிப்பு முறையே 10% , 15% ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதிப் (ETF) பங்களிப்பு 3% ஆகும். ஊழியர் சேமலாப நிதி EPF ஊழியர் நம்பிக்கை நிதி ETF என்பவை தொடர்பில் எந்தவிதக் கொடுப்பனவோ ஏற்பாடோ செய்யப்படவில்லை. ஊழியர் சேமலாப நிதி (EPF) இல் ஊழியர் பங்களிப்பினை குறைத்த பெறுமதியே சம்பளமாகக் காட்டப்பட்டுள்ளது.

(ix) வருடத்திற்கான திறைசேரி உண்டியலுக்கான வட்டி அட்டுறுவாகவுள்ளது.

(x) வருட இறுதியில் வியாபாரத்திற்கு கிடைக்க வேண்டிய மீதியிலிருந்து ரூபா 80 000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிப்பதற்கும், எஞ்சிய வியாபார. கிடைக்க வேண்டிய மீதியில் 10% ஐ ஐயக்கடனாக ஏற்பாடு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

(xi) நடைமுறையாண்டில் வருமான வரியானது வரிக்கு முன்னரான இலாபத்தில் 1/3 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்காக எந்தவித ஏற்பாடோ, கொடுப்பனவோ மேற்கொள்ளப்படவில்லை.

(xii) 2016.03.31 இல் இயக்குநர்கள் பின்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளனர்.

- நிறுத்திவைத்த உழைப்புக்களில் ரூபா 500 000 ஐ பொது ஒதுக்கத்திற்கு மாற்றுதல்.
- ரூபா 600 000 பங்கிலாபமாக செலுத்துதல்.

[பக். 3 ஐப் பார்க்க.

வேண்டப்படுபவை :

LKAS-1 (நிதிக் கூற்றுகளை முன்வைத்தல்) நியமத்திற்கேற்ப பிரசித்தப்படுத்தலுக்காக **வரையறுக்கப்பட்ட சியாம் பொதுக்கம்பனியின்** பின்வரும் நிதிக் கூற்றுக்கள் (குறிப்புகள் உட்பட)

1. 2016.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று.
2. 2016.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான உரிமை மாற்றல் கூற்று.
3. 2016.03.31 இல் நிதி நிலமைக் கூற்று.

(20 புள்ளிகள்)

2. (அ) **நதி, சஜி, ராஜி** 2 : 2 : 1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து கொண்டு பங்குடமை வணிகமொன்றை நடாத்திச் சென்றனர். 2015.03.31 இல் பங்குடமை வணிகத்தின் நிதி நிலமைக்கூற்று பின்வருமாறு.

	(ரூபா 000)	(ரூபா 000)
நடைமுறை அல்லாத சொத்துக்கள்		
ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்	3 800	
திரண்ட தேய்வு	(820)	2 980
நடைமுறைச் சொத்துக்கள்		
சரக்கிருப்பு	250	
வியாபாரக் கடன்பட்டோர்	750	
ஐயக்கடன் ஏற்பாடு	(150)	
காசு	480	1 330
		4 310
மூலதனக் கணக்கு		
நதி	900	
சஜி	700	
ராஜி	800	2 400
நடைமுறைக் கணக்கு		
நதி	460	
சஜி	400	
ராஜி	540	1 400
நடைமுறைக் கணக்கு		
வியாபாரக் கடன் கொடுநர்	400	
அட்டுறு காரயாலயச் செலவுகள்	110	510
		4 310

The National e-learning Portal for The General Education

மேலதிகத் தகவல்கள் :

01. 2015.04.01 இல் **ராஜி** பங்குடமை வணிகத்திலிருந்து ஓய்வுபெற்றார். இத்திகதியில் நன்மதிப்பானது ரூபா 800 000 வாக பங்காளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், இது தொடர்பிலான சகல சீராக்கங்களும் மூலதனக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட வேண்டும். ராஜிக்கு செலுத்த வேணடிய தொகையினை அவரின் கடன் கடனுக்கு மாற்றுவதற்கும் அதற்கு வருடாந்தம் 5% வட்டி வழங்குவதற்கும் பங்காளர்கள் உடன்பட்டனர்.

02. நதியும், சஜியும் பங்குடமை வணிகத்தை பின்வரும் இணக்கப்பாட்டுடன் தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்கு இணங்கினர்.

(அ) சகல பங்காளர்களுக்கும் வருடாந்தம் ரூபா 120 000 ஐ சம்பளமாக செலுத்துதல்.

(ஆ) சீராக்கப்பட்ட மூலதன மீதிக்கேற்ப வருடாந்தம் 10% வட்டியைப் பெற்றுக் கொள்ளல்.

(இ) இலாப நட்டத்தை சமமாகப் பகிர்ந்து கொள்ளல்.

[பக். 4 ஐப் பார்க்க.

03. 2016.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான காசுக் கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் பின்வருமாறு.

பெறுவனவுகள்	(ரூ. 000)
கடன்பட்டோரிடமிருந்து பெற்றது	5 250
கொடுப்பனவுகள்	
ஊழியர் சம்பளம்	400
கடன் கொடுத்தோருக்கு செலுத்தியது	3 100
காரியாலய செலவுகள்	600
விநியோகச் செலவுகள் (2015.04.01 லிருந்து 15 மாதங்களுக்கானது)	900
பற்றுக்கள் - நதி	240
- சஜி	260
ராஜிக்குச் செலுத்திய கடன் வட்டி	75

04. சகல ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் 10% ப்படி நேர் கோட்டு முறையில் வருடாந்தம் பெறுமானத் தேய்வு செய்யப்படும்.

05. 2016.03.31 இல் காசு தவிர்ந்த சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு

	(ரூபா 000)
சரக்கிருப்பு	700
கடன்பட்டோர்	500
அட்டுறு காரியாலயச் செலவுகள்	150
கடன் கொடுநர்	100

06. வருட முடிவிலுள்ள கடன்பட்டோர் மீதியின்படி வருடாந்தம் 20% ஐயக்கடன் ஏற்பாடு செய்தல் பங்குடமை வணிகத்தின் கொள்கையாகும்.

07. சகல கொள்வனவு விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

தேவைப்படுவது :

1. 2016.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்று (பகிர்வு உட்பட)
2. 2016.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான பங்காளர்களின் மூலதனக் கணக்குகளும் நடைமுறைக் கணக்குகளும்.
3. 2016.03.31 இல் நிதி நிலமைக் கூற்று. **(10 புள்ளிகள்)**

(ஆ) **லலிதா வணிகம்** உற்பத்தி செய்யும் விசேட வகையிலான பூந்தொட்டிகளுக்கு குறித்த நிதியாண்டொன்றில் பொது மேந்தலைக் கிரயமானது முதல் கட்டடப்பகிர்வு செய்யப்பட்ட முறை கீழே தரப்பட்டுள்ளது.

உற்பத்தி திணைக்களம்		சேவைப்பகுதி	
முடிவுருத்தல் (ரூபா)	நிறப்பூச்சிடல் (ரூபா)	களஞ்சியச் சாலை (ரூபா)	பராமரிப்புப் பகுதி (ரூபா)
505 000	600 000	105 000	70 000

மேலதிகத் தகவல்கள் :

(1)

	முடிவுருத்தல்	நிறப் பூச்சிடல்	களஞ்சிய சாலை	பராமரிப்புப் பகுதி
மதிப்பிடப்பட்ட மொ. இயந்திர மணித்தியாலங்கள்	3000	2000	-	-
பராமரிப்பு - மணித்தியாலங்கள்	5000	3000	-	-
களஞ்சிய வேண்டுகோள் பத்திரங்களின் எண்ணிக்கை	20	30	-	-
ஊழியர்களின் எண்ணிக்கை	25	15	5	5
அலகொன்றை உற்பத்தி செய்ய எடுக்கும் இயந்திர மணித்தியாலங்களின் எண்ணிக்கை	1	1/2	-	-

[பக். 5 ஐப் பார்க்க.

(2) முதல் கட்டடப் பகிர்வின்போது பின்வரும் உருப்படிகள் விடுபட்டுள்ளமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

	(ரூபா)
ஊழியர் நலன்புரிச் செலவுகள்	100 000
மேற்பார்வையானர் சம்பளம் - முடிவுருத்தல்	120 000
- நிறப்பூச்சிடல்	139 000

(3) அலகொன்றிற்கான நேர் பொருள் கிரயம் ரூபா 400 , நேர் கூலிக் கிரயம் ரூபா 200 ஆகவும் இருந்ததுடன் ஏனைய நேர் செலவுகள் எதுவுமில்லை.

வேண்டப்படுவது :

1. பொது மேந்தலைக் கிரயப் பகுப்பாய்வுப் பத்திரம்
2. ஒவ்வொரு உற்பத்தித் திணைக்களத்திற்கும் பொது மேந்தலைக் கிரயமானது உள்ளீர்ப்புச் செய்யப்படுவது **இயந்திர மணித்தியாலங்களின்** அடிப்படையில் என்பதைக் கருத்தில் கொண்டு அலகொன்றிற்கான மொத்தக் கிரயத்தைக் கணிக்க.
3. பொது மேந்தலைக் கிரயமானது **ஆரம்பக் கிரயத்தில் 75%** ஆக உள்ளீர்ப்புச் செய்யப்படுகின்றது எனக் கருதி அலகொன்றிற்கான மொத்தக் கிரயத்தைக் கணிக்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3. (அ) **மயூரி** வணிகத்தின் 2016/01/01 இல் நிதிநிலமைக்கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகள் பின்வருமாறு.

	ரூபா 000
காணி	1 400
மோட்டார் வாகனம்	1 000
தளபாட இணைப்புக்கள்	500
சரக்கிருப்பு	165
வியாபார. கிடைக்க வேண்டியவைகள்	135
காசு மீதி	550
12% வங்கிக் கடன்	100
வியாபார. செலுத்த வேண்டியவைகள்	450

பின்வரும் கொடுக்கல் வாங்கல் சனவரி மாதத்தினுள் இடம்பெற்றுள்ளன.

1. ரூபா 65 000 பெறுமதியான சரக்குகள் கொள்வனவு செய்யப்பட்டன.
2. ரூபா 80 000 பெறுமதியான பண்டங்கள் ரூபா 115 000 இற்கு விற்பனை செய்யப்பட்டதுடன் அதில் ரூபா 75 000 காசாகக் கிடைக்கப் பெற்றதுடன் எஞ்சியது கடனாகும்.
3. சனவரி மாதத்தில் கட்டட வாடகை செலுத்தியது ரூபா 20 000 ஆகும்.
4. ரூபா 100 000 பெறுமதியான கடன்பட்டோரிடமிருந்து 5%கழிவு கழித்து காசு கிடைத்தது.
5. **மயூரி** தனது வீட்டின் மின்சாரக் கட்டணமான ரூபா 5 000 ஐ வணிகப் பணத்திலிருந்து செலுத்தினார்.
6. வங்கிக்கடன் ரூபா 6 000 மீளச் செலுத்தப்பட்டதுடன் அதில் உள்ளடக்கப்பட்டிருந்த கடன் வட்டி ரூபா 1 000 ஆகும்.

வேண்டப்படுவது :

1. 2016/01/31 இல் முடிவடைந்த மாதத்தில் வணிகத்தில் இடம்பெற்றிருந்த மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களின் தாக்கங்களை கீழே தரப்பட்டுள்ள சமன்பாட்டில் எழுதிக் காட்டுக.

கொடுக்கல் வாங்கல் இலக்கமும் மீதியும்	சொத்து				பொறுப்பு		உரிமை
	ஆதனம் பொறி மற்றும் உபகரணம்	வியா. கிடைக்க வேண்டியவை	சரக்கிருப்பு	காசு	வியா. செலுத்த வேண்டியவை	வங்கிக் கடன்	
மீ/வ							

2. தேறிய சொத்து முறையில் சனவரி மாத்திற்குரிய இலாபத்தைக் கணிக்கவும்.

(05 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க.

(ஆ)பின்வரும் தகவல்கள் 2016 மார்ச் மாதத்தின் **வரையறுக்கப்பட்ட ஷெரீன் பொதுக்கம்பனியின்** ஊழியர் சம்பளம் தொடர்பானதாகும்.

(i) ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதி (E P F) க்கு ஊழியர், தொழில் வழங்குநர் பங்களிப்புகள் முறையே 10% , 15% மாகும். ஊழியர் நம்பிக்கை நிதிக்கு தொழில் வழங்குநர் பங்களிப்பு 3% ஆகும்.

(ii) மார்ச் மாதத்தில் கடன் தவணைக் கட்டணம் ரூபா 80 000 வும் விழா முற்பணம் ரூபா 500 000 கவும் சம்பள முற்பணம் 300 000 வும் ஊழியர் சம்பளத்திலிருந்து குறைக்கப்பட்டுள்ளது.

(iii) ஊழியர்களின் சம்பளம் கூலி மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அடுத்துவரும் மாதத்தில் 10 ஆம் திகதி மேற்கொள்ளப்படும்.

(iv) சம்பளம் கூலிகளின் அமைப்பு பின்வருமாறு.

(ரூபா 000)

உழைப்பு உருப்படிகள்	மொத்தம்	உற்பத்தி ஊழியர்	உற்பத்தி மேற்பார்வையாளர்	உற்பத்தியல்லாத ஏனைய சேவைகள்
அடிப்படைச் சம்பளம்	2 800	1 500	300	1 000
ஊக்குவிப்புக் கொடுப்பனவு	300	250	50	-
கம்பனியின் இலாப அடிப்படையிலான மேலதிகக் கொடுப்பனவு	470	150	20	300
போக்குவரத்துக் கொடுப்பனவு	260	100	10	150
மேலதிக நேர கொடுப்பனவு	50	50	-	-
மொத்தச் சம்பளம்	3 880	2 050	380	1 450

வேண்டப்படுவது :

1. மேற்குறிப்பிட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு உருப்படிகளினதும் மொத்த பெறுமதியினைக் காட்டி சம்பளப் பட்டியலொன்றைத் தயாரிக்க.
2. ஊழியர்களுக்குரிய **நேர் சம்பளம், உற்பத்தி பொது மேந்தலைக் கிரயத்திற்குரிய சம்பளம், மொத்த கூலிக்கிரயம்** என்பவற்றை வெவ்வேறாகக் காட்டுக.

(05 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

4. (அ) **சிறில்** சில்லறை வணிகத்தின் 2016 மார்ச் மாதத்திற்கான தகவல்களில் சில பின்வருமாறு.

- மார்ச் 01 இல் கடன் கொடுநர் பேரேட்டு மீதி

	ரூபா
அமிர்	20 000
சரித்	30 000
ஜனித்	24 000
சுமித்	16 000
	90 000

- மார்ச் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்ட மூல ஏடுகளின் பொழிப்பு பின்வருமாறு.

கொள்வனவு நாட்குறிப்பு

வழங்குநர்	பெறுமதி (ரூபா)
அமிர்	75 000
சரித்	60 000
ஜனித்	37 500
	172 500

வெளித்திரும்பல் நாட்குறிப்பு

வழங்குநர்	பெறுமதி (ரூபா)
அமிர்	5 000
	5 000

[பக். 7 ஐப் பார்க்க.

காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பு

விபரம்	காசு (ரூபா)	கொள்வனவு (ரூபா)	கடன் கொடுநர் (ரூபா)	பல்வேறு கொடுப்பனவு (ரூபா)
கொள்வனவு	40 000	40 000		
அமிர்	20 000		20 000	
சரித்	10 000		10 000	
கொள்வனவு	30 000	30 000		
செலுத்திய கட்டட வாடகை	25 000			25 000
சுமித்	10 000		10 000	
ஜனித்	30 000		30 000	
அமிர்	15 000		15 000	
செலுத்திய வட்டி	8 000			8 000
லலித்	20 000		20 000	
	208 000	70 000	105 000	33 000

- லலித்திடம் கடனுக்கு வாங்கிய கணினிக்குச் செலுத்திய ரூபா 20000 கடன் கொடுநர் கொடுப்பனவாக காட்டப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது :

2016 மார்ச் மாதத்திற்கான

1. கடன் கொடுநர் பேரேடும், கடன் கொடுநர் மீதிப்பட்டியலும்
2. பொதுப் பேரேட்டில் கடன் கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கும் (உரிய திருத்தங்களுடன்) கொள்வனவுக் கணக்கும்

(10 புள்ளிகள்)

(ஆ) 2015.04.01 இல் **சதுர்சன்** வணிகத்தின் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கிரயமும், திரண்ட தேய்வின் பெறுமதியும் கீழே காட்டப்பட்டுள்ளது.

	கிரயம் (ரூபா 000)	**திரண்ட தேய்வு (ரூபா 000)**
கட்டடம்	6 500	3 250
மோட்டார் வாகனம்	4 800	2 200
இயந்திரம்	3 000	1 500
தளபாடமும் இணைப்புக்களும்	1 000	400

* 2015.04.01 இல் ரூபா 1 250 000 கிரயத்தில் கட்டடம் நவீனமயப்படுததப்பட்டுள்ளது. அதன் காரணமாக அதன் மொத்த ஆயுற்காலம் 20 வருடங்களிலிருந்து 25 வருடங்களாக அதிகரித்துள்ளது. இழிவுப் பெறுமதி எதுவுமில்லை.

* வணிகத்திடமிருந்த மோட்டார் வாகனம் 2015.04.01 இல் ரூபா 3 800 000 வாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

* 2015.04.01 இல் வணிகத்திடம் காணப்பட்ட பழைய இயந்திரம் ரூபா 1 000 000 விற்கு விற்பனை செய்யப்பட்டது.

* தளபாடமும் இணைப்புக்களும், காரியாலய உபகரணங்கள், என்பவற்றின் இழிவுப் பெறுமதி முறையே ரூபா 200 000 வும் ரூபா 50 000 வும் இருந்ததுடன் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்பாடு ஆயுற்காலம் முறையே 20, 9 ஆகும்.

* 2015.10.01 இல் ரூபா 500 000 காரியாலய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

வேண்டப்படுவது :

1. 2016.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கட்டடம், தளபாட இணைப்புக்கள், காரியாலய உபகரணங்கள் என்பவற்றின் வருடத்திற்கான தேய்வு.
2. மோட்டார் வாகன மீள்மதிப்பீட்டு இலாபம்/ நட்டம்
3. இயந்திர அகற்றுதல் கணக்கு

(05 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க.

5. (அ) **வரையறுக்கப்பட்ட சூர்யா பொதுக்கம்பனியின்** 2016.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று பின்வருமாறு.

இலாப நட்ட மற்றும் ஏனைய
வருமானக் கூற்று (ரூபா 000)

விற்பனை	8 500
விற்பனைக் கிரயம்	(5 300)
மொத்த இலாபம்	3 200
ஏனைய வருமானங்கள்	100
	3 300
விநியோகச் செலவுகள்	(2 300)
நிர்வாகச் செலவுகள்	(550)
நிதிச் செலவுகள்	(70)
வரிக்கு முன்னரான இலாபம்	380
வருமான வரி	(220)
நிதியாண்டுக்கான இலாபம்	160

2015.03.31 இலும் 2016.03.31 ஆம் திகதிகளிலும் நிதிநிலைமைக் கூற்றுகளிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட பொழிப்பாக்கப்பட்ட நிதி நிலமைக் கூற்று பின்வருமாறு.

	2016.03.31	**2015.03.31**
	(ரூ 000)	(ரூ 000)
ஆதனம் பொறி, உபகரணம் (தேறிய பெறுமதி)	3 800	4 000
இருப்பு	600	350
கடன்பட்டோர்	430	540
முற்பண செயற்பாட்டுச் செலவுகள்	30	65
மூன்றுமாத திறைசேரி உண்டியல்கள்	80	100
வங்கி	20	–
காசு	70	85
	5030	5140
கூறப்பட்ட மூலதனம் - சாதாரண பங்குகள்	3 600	3 300
நிறுத்தி வைத்த உழைப்பு	250	150
வங்கிக் கடன்	700	900
கடன் கொடுநர்	150	180
செலுத்த வேண்டிய வருமானவரி	110	80
அட்டுறு செயற்பாட்டுச் செலவுகள்	220	150
வங்கி மேலதிகப் பற்று	-	380
	5030	5140

மேலதிகத் தகவல்கள்

1. 2016.03.31 ஆம் திகதியில் ரூபா 800 000 தேறிய பெறுமதி கொண்ட இயந்திரமொன்று விற்பனை செய்யப்பட்டதுடன், அதன் மூலம் கிடைத்த இலாப வருமானக் கூற்றில் ஏனைய வருமானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
2. 2016.03.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான தேய்வு ரூபா 280 000 ஆகும்.
3. வருடத்தினுள் கம்பனியினால் பங்காளர்களுக்கு இடைக்காலப் பங்கிலாபம் வழங்கப்பட்டுள்ளது.
4. மொத்த விற்பனைகளில் 60% காசு விற்பனை என்பதுடன் சகல கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
5. வருடத்தினுள் வங்கிக் கடன் தவணைக் கட்டணம் ரூபா 470 000 செலுத்தப்பட்டுள்ளதுடன் அதில் ரூபா 70 000 கடன் வட்டியாகும். நிதிச் செலவு இக்கடன் வட்டியையே பிரதிநிதித்துவம் செய்கின்றது.

வேண்டப்படுவது :

1. இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 (LKAS-07) இற்கேற்ப **நேர் முறையினைப் பயன்படுத்தி** காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்க. **(10 புள்ளிகள்)**

[பக். 9 ஐப் பார்க்க.

(ஆ) **சர்மா** தனியுரிமை வணிகமொன்றின் உரிமையாளராவார். கீழே காட்டப்பட்டுள்ள நிதி நிலமைக் கூற்று அவரின் வணிகத்தின் பயிற்சிபெறும் கணக்காளரால் தயாரிக்கப்பட்டுள்ளது.

2015/12/31 இல் நிதி நிலமைக் கூற்று

	ரூபா	ரூபா
ஆதனம் பொறி மற்றும் உபகரணம்		600 000
சரக்கிருப்பு	240 000	
கடன் பட்டோர்	110 000	
வங்கியிலும் கையிலும் உள்ள காசு	280 000	
தொங்கல் கணக்கு	100 000	
		730 000
		1 330 000
மூலதனம்	800 000	
தேறிய இலாபம்	300 000	
		1 100 000
கடன் கொடுநர்		230 000
		1 330 000

பின்வரும் வழுக்கள் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டன.

1. கொடுத்த கழிவு ரூபா 3 500 கணக்குகளில் ரூபா 5 300 எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது.
2. காசு விற்பனை ரூபா 20 000 விற்பனைக் கணக்கில் இருமுறை செலவு வைக்கப்பட்டிருந்தது.
3. கடன் கொடுநருக்கான கொடுப்பனவு ரூபா 65 000 வும், சம்பளம் ரூபா 15 000 வும் கொடுப்பனவுக் காசேட்டிலும் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாக பதிவு செய்யப்பட்டிருந்தாலும் உரிய ஏனைய கணக்குகளில் பதிவு செய்யப்படவில்லை.

வேண்டப்படுவது

1. மேற்குறிப்பிட்ட வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளும் தேறிய இலாபத்தை திருத்தும் கூற்றும்.
2. வழுக்களைத் திருத்திய பின்னர் 2015/12/31 இன் நிதி நிலமைக் கூற்று.

(05 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

6. (அ) **பாடசாலை** ஒன்றில் வர்த்தக மாணவர் சங்கமானது வர்த்தக தினத்தை கொண்டாடுவதற்குத் தேவையான நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு மாணவப் பாடகர் பாடகிகளைப் பயன்படுத்தி இசை நிகழ்ச்சியொன்றை நடாத்துவதற்கு திட்டமிட்டு வருகின்றது. இதற்கான உத்தேச வருமானம், செலவுகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

	ரூபா
அனுமதிச் சீட்டொன்றின் விலை	100
ஒரு மாணவருக்கான சிற்றுணவும் ஏனைய செலவுகளும்	30
அனுமதிச்சிட்டு அச்சிடல் செலவு	2 000
எழுது பொருட்களுக்கான செலவு	1 000
கேட்போர் கூட வாடகை	10 000
விளம்பரச் செலவு	2 000
ஒலிபெருக்கி உபகரணங்களுக்கான செலவு	20 000

வேண்டப்படுவது :

பின்வருவனவற்றைக் கணிக்க :

1. இலாபமோ நட்டமோ கிடைக்காத மட்டத்திற்காக விற்பனை செய்ய வேண்டிய அனுமதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை.
2. ரூபா 35 000 இலாபம் பெறுவதாயின் விற்பனை செய்யவேண்டிய அனுமதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை.
3. 750 அனுமதிச்சீட்டுக்களை விற்பனை செய்யும்போது இலாபம்.
4. 800 அனுமதிச் சீட்டுக்களை விற்பனை செய்யும்பொது ரூபா 37 000 இலாபத்தைப் பெறுவதற்கு அனுமதிச் சீட்டொன்றின் விற்பனை விலையாக நிர்ணயிக்க வேண்டிய பெறுமதி.

(05 புள்ளிகள்)

[பக். 10 ஐப் பார்க்க.

(ஆ) **லாஹிர்** என்பவரினால் நடாத்திச் செல்லப்படுகின்ற தனியுரிமை வணிகத்தின் **சில்லறைச் செலவுகள் தவிர்ந்த** ஏனைய சகல கொடுப்பனவுகளும் வங்கிக் கணக்கின் மூலம் (காசோலை மூலம்) மேற்கொள்ளப்படுவதுடன் சகல காசுப் பெறுவனவுகளும் நேரடியாக வங்கிக் கணக்குக்கு அல்லது காசோலை மூலம் பெறப்பட்டுள்ளது. வங்கிக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான ஏனைய தகவல்கள் பின்வருமாறு.

(1) 2016 மார்ச் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பெறுவனவுகள்	(ரூ. 000)	**கொடுப்பனவு**	(ரூ. 000)
காசுக்கு விற்பனை	560	காசுக் கொள்வனவு	220
வணிகப்பாவனைக்கிருந்த காரியாலய உபகரண விற்பனை	200	கடன் கொடுநருக்கு - சனத்	300
கடன்பட்டோரிடமிருந்து கிடைத்தது - அமல்	320	செலவுகளுக்கான கொடுப்பனவு	240
காசு விற்பனை	60	கடன்கொடுநர்	40
கடன்பட்டோரிடமிருந்து கிடைத்தது	150	கொள்வனவு	200

(2) 2016 மார்ச் மாதத்திற்கு கிடைத்த வங்கிக் கூற்றின் பொழிப்பு

	(ரூ. 000)
தேறிய காசோலைகள்	1 000
வழங்கிய காசோலைகளுக்கான கொடுப்பனவு	700
கடன்பட்டோர் நேரடி வைப்பு	100
வங்கி அறவிட்ட கட்டணம்	20
நிலையியற் கட்டளையின் கீழ் செலுத்திய காப்புறுதித் தவணைக் கட்டணம்	15
வைப்புச் செய்யப்பட்ட மதிப்பிழந்த காசோலைகள்	90

(3) 2016.03.01 இல் வணிகத்தின் வங்கிக் கணக்கின் மீதி ரூபா 10 000 ஆக இருந்ததுடன், அது அத்திகதிய வங்கிக் கூற்றின் மீதியுடன் இணங்கியது.

(4) கடன்பட்டோருக்கு கொடுத்த கழிவு ரூபா 4 000 ஆக இருந்ததுடன் கடன் கொடுத்தோரிடமிருந்து பெற்ற கழிவு ரூபா 3 000 ஆகக் காணப்பட்டது.

வேண்டப்படுவது :

(1) மேலே இலக்கம் (1) இன் தரவுகளின் உதவியுடன் 2016 மார்ச் மாதத்திற்கான வங்கிக் கணக்கினூடாக பெறுவனவு, கொடுப்பனவு, நாட்குறிப்புக்களை வெவ்வேறாகக் காட்டுக.

(2) 2016.3.31 ஆம் திகதி வங்கிக் கணக்கினை சீராக்கி வங்கி இணக்கக் கூற்றினைத் தயாரிக்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

7. (அ) கம்பனியொன்று தான் பயன்படுத்திய இயந்திரமொன்றை விற்பனை செய்தபின் புதிய அதி நவீன இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்ய உத்தேசிக்கின்றது. புதிய இயந்திரத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் பின்வருமாறு.

	(ரூ. 000)
கொள்வனவு விலை	2 500
பொருத்துதல் கிரயம்	200
வேலைத்தள ஒழுங்கமைப்புக் கிரயம்	300
இயந்திரத்தை கொண்டு வரும் கிரயம்	100

பின்வரும் தகவல்கள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1. பழைய இயந்திரத்தை விற்பனை செய்யக்கூடிய விலை ரூபா 600 000 ஆகும். பழைய இயந்திரத்தின் தேறிய பெறுமதி ரூபா 500 000 ஆகும்.
2. புதிய இயந்திரத்தை கொள்வனவு செய்வதன் காரணமாக தற்போதுள்ள தொழிற்படு மூலதனம் ரூபா 100 000 விலிருந்து ரூபா 250 000 வாக அதிகரிக்கும். அந்த அதிகரிப்பு 4 வது வருடத்தில் தேரும்.
3. புதிய இயந்திரத்தின் உத்தேச பயன்படு ஆயுற்காலமும் பழைய இயந்திரத்தின் எதிர்வரக்கூடிய உத்தேச பயன்படு ஆயுற்காலம் 4 வருடங்களாகும். புதிய இயந்திரத்தின் உத்தேச இழிவுப் பெறுமதி ரூபா 200 000 பழைய இயந்திரத்திற்கு இழிவுப் பெறுமதி எதுவுமில்லை.

[பக். 11 ஐப் பார்க்க.

4. எதிர்வரும் நான்கு வருடங்களுக்கான மதிப்பிடப்பட்ட செயற்பாட்டு காசுப்பாய்ச்சல் பின்வருமாறு.

வருடம்	காசுப் பெறுவனவு (ரூ. 000)		காசுக் கொடுப்பனவு (ரூ. 000)	
	பழைய இயந்திரம்	புதிய இயந்திரம்	பழைய இயந்திரம்	புதிய இயந்திரம்
1	800	1 800	400	600
2	900	2 300	500	800
3	900	2 400	600	1 100
4	800	2 200	550	1 300

5. 10% எதிர்பார்ப்பு அனுகூல வீதம் (கழிவுக் காரணி) பின்வருமாறு

வருடம்	1	2	3	4
கழிவுக் காரணி	0.9	0.8	0.7	0.6

வேண்டப்படுவது :

1. செயற்றிட்டத்தின் ஆரம்ப தேறிய காசுப்பாய்ச்சல் (உருப்படிகளை வெவ்வேறாகக் காட்டி)
2. முதலாம் வருடத்திலிருந்து வருடாந்த தேறிய காசு பாய்ச்சல்கள்
3. புதிய இயந்திரத்தின் தேறிய நிகழ் காலப் பெறுமதி

(05 புள்ளிகள்)

(ஆ) **மகேஸிகா மகளிர் சங்கமானது** அங்கத்தவர்களுக்கு சுய தொழிலுக்காக கடன் வழங்குவதுடன் திடீர் அனர்த்தங்களின்போது நன்கொடைகளையும் வழங்கி வருகின்கின்றது.

நிறுவனம் தனது நிதி நிலைமையினை உறுதியாகப் பேணுவதற்காக அங்கத்துவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அங்கத்தவர்களின் உழைப்பினைப் பயன்படுத்தி துணியினால் செய்யப்படுகின்ற கைப்பை உற்பத்தி வணிகமொன்றை நடாத்திச் செல்கின்றது. இதற்கான உழைப்பினை வழங்கும் அங்கத்தவர்களுக்கு நியமமான சம்பளத்தை வழங்குகின்றது.

மேற்குறிப்பிட்ட சங்கத்தின் தகவல்களிலிருந்து தெரிவுசெய்த தகவல்களின் உருப்படிகளில் சில கீழே தரப்பட்டுள்ளது.

1. **காசுப் பெறுவனவு**

	ரூபா
அங்கத்தவர் கட்டணம்	300 000
கிடைத்த கடன் வட்டி	80 000
சாதாரண நன்கொடை	200 000

2. **காசுக் கொடுப்பனவு**

	ரூபா
மூலப்பொருள் கொள்வனவு	350 000
தையல் நிலைய பொது மேந்தலைக் கிரயம்	113 100
நிர்வாகச் செலவுகள்	300 000
கைப்பை விற்பனைச் செலவுகள்	50 000
திடீர் அனர்த்த உதவிகள்	250 000

3. **சொத்துக்களும் பொறுப்புக்களும்**

	2016.03.31 (ரூ.)	2015.04.01 (ரூ.)
தையல் இயந்திரம் (தேறிய பெறுமதி)	450 000	500 000
மூலப்பொருள்	41 000	43 000
முற்பண அங்கத்துவக் கட்டணம்	15 000	20 000
நிலுவை அங்கத்துவக் கட்டணம்	30 000	10 000

[பக். 12 ஐப் பார்க்க.

4. 2015.04.01 இல் தைத்து முடிக்கப்பட்ட 200 கைப்பைகள் இருந்ததுடன் அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயம் ரூபா 300 ஆகும். 2016.03.31 ல் எஞ்சிய கைப்பைகளின் எண்ணிக்கை 400 ஆகும்.

5. வருடத்தினுள் உற்பத்தி செய்யப்பட்ட பைகளின் எண்ணிக்கை 2020 ஆகும்.

6. ஒரு கைப்பையினை தைத்து முடிப்பதற்கு பெண் ஊழியரொருவருக்கு ரூபா 50 செலுத்தப்படுகின்றது. வருடத்தினுள் இதற்கான கொடுப்பனவுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

7. நிர்வாகச் செலவில் 1/3 பங்கு தையல் நிலையத்திற்குரியதாகும்.

8. கைப்பையொன்றின் விற்பனை விலை ரூபா 450 ஆகும்.

வேண்டப்படுவது :

2016.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கு பின்வருவனவற்றைத் தயாரிக்க.

1. தையல் நிலையத்தின் உற்பத்திக் கணக்கு.
2. தையல் நிலையத்தின் வருமானக் கூற்று.
3. மகளிர் சங்கத்தின் வருமான செலவுக் கணக்கு.

(10 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

* * *

The National e-learning Portal for The General Education